# கணக்கீடு – 33 தரம் - 13

## Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 6

### தேர்ச்சி – 12.4 : காசுப்பாய்ச்சல் கூற்று

வாரம் - 6 தயாரிப்பு : சஜித்.sp
இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி BBA(Financial Spl), University of Colombo

Sajith.SP

★ **காசுப்பாய்ச்சல் கூற்று (Cash Flow Statement)**
உரிமமொன்றின் நிதியாண்டுக் காலப்பகுதிக்கான **காசும் காசுக்கு சமனானவைகளின்** உட்பாய்ச்சல்களையும், வெளிப்பாய்ச்சல்களையும் அறிக்கைப்படுத்தும் கூற்றே **காசுப்பாய்ச்சல் கூற்று** எனப்படும்.

★ **காசு ( Cash )**
கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள கேள்வி வைப்புக்களைக் குறிப்பதாகும்.
**உதாரணம்** : காசு மீதி, சில்லறைக் காசு மீதி

★ **காசுக்குச் சமமானவைகள் (Cash Equivalents)**
காலதாமதமும் நட்டங்களும் இன்றி காசாக மாற்றக்கூடிய மிக உயர்ந்த திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகளாகும்.
**உதாரணம்** : திறைசேரி உண்டியல்கள் (மூன்று மாதங்கள்)

★ **காசுப்பாய்ச்சல் (Cash Flow)**
காசும் காசுக்குச் சமமானவைகளும் நிறுவனத்தினுள் உட்பாய்தல் காசு உட்பாய்ச்சல் எனவும், வெளிப்பாய்தல் காசு வெளிப்பாய்ச்சல் எனவும் அழைக்கப்படும்.

♦ **காசுப்பாய்ச்சல்கள் பின்வருமாறு மூவகைப்படுத்தப்படும்**

➢ **செயற்பாட்டு நடவடிக்கைகள் (Operating Activities)**

வணிக நிறுவனமொன்றின் பிரதான வருமானம் உழைக்கும் நடவடிக்கைகள் மூலம் உருவாகும் காசுப்பாய்ச்சல்கள் செயற்பாட்டு நடவடிக்கைகள் எனப்படும். **அல்லது,** முதலீட்டு மற்றும் நிதியீட்ட நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆகும்.
**உதாரணம்:**

- பொருள்கள் அல்லது சேவைகளின் விற்பனையின் மூலம் பெறப்படும் காசு.
- பொருள்கள் / சேவைகளை வழங்குவதற்காக வழங்குனர்களுக்கு கொடுப்பனவு
- ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும்.
- காப்புறுதிக் கொடுப்பனவு அல்லது அனுகூலங்களைப் பெறல்.
- நிதி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின் அடிப்படையில் விசேடமாக இனங்காண முடியாத எந்தவொரு காசுப்பாய்ச்சல்களும்.

..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

- **முதலீட்டு நடவடிக்கைகள் (Investing Activities)**

எதிர்காலத்தில் வருமானங்களை உழைக்கும் எதிர்பார்ப்பில் நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்படும் முதலீட்டுச் செயற்பாடே இதன் பொருளாகும். வணிகத்தின் எதிர்கால அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக நீண்டகாலச் சொத்துக்கள், நீண்டகால முதலீடுகளைக் கையேற்றலும் அகற்றலும் என்பவற்றுடன் தொடர்பான காசுச் செயற்பாடுகள் இதற்குரியனவாகும்.

**உதாரணங்கள்:**

- ஆதனம், பொறி உபகரணங்கள், கட்புலனாகாச் சொத்துக்களையும் ஏனைய நீண்ட காலச் சொத்துக்களையும் கையேற்பதற்கு, நிர்மாணிப்பதற்கு அல்லது விருத்தி செய்வதற்குக் கொடுபட்ட காசு.
- ஆதனம், பொறி உபகரணங்கள், கட்புலனாகாச் சொத்துக்கள், ஏனைய நீண்ட காலச் சொத்துக்கள் என்பனவற்றை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் காசு.
- வெளியக உள்ளகப் பிரிவினர்களுக்கு வழங்கும் கடன், காசு முற்பணக் கொடுப்பனவு, கடன் அறவிடல்.
- வட்டி கிடைத்தல், பங்குலாபம் கிடைத்தல், கட்டட வாடகை கிடைத்தல்.
- ஊழியர்களுக்கு வழங்கிய கடன்கள்
- ஊழியர்களிடம் மீளப் பெற்ற கடன்

..........................................................................................................................................
..........................................................................................................................................
.......................................................................................................................................

- **நிதி நடவடிக்கைகள் (Financing Activities)**

வணிகமொன்றின் உரிமை மூலதனம், கடன் மூலதனம் என்பவற்றின் அளவினை அல்லது அவற்றின் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளாகும். பின்வருவன வணிகமொன்றின் நிதியீட்டத்துடன் தொடர்பான காசுப்பாய்ச்சலாகும்.

**உதாரணங்கள்:**

- பங்குகள் அல்லது ஏனைய அவ்வாறான உரிமைக் கருவிகளை வழங்குவதன் மூலம் பெறப்படும் காசு.
- பங்குகளைக் கையகப்படுத்திக் கொள்வதற்கு அல்லது மீட்பதற்கு செலுத்தப்படும் காசு.
- தொகுதிக் கடன்கள் அல்லது நீண்டகாலக் கடன்கள் மூலம் பெறப்படும் காசு அல்லது அவ்வாறான கடனை மீளச் செலுத்துதல்.
- நிதிக் குத்தகையின் தவணைக் கட்டணத்தைச் செலுத்துதல். (வட்டி தவிர)
- பங்குதாரர்களுக்குப் பங்குலாபம் செலுத்துதல் / உரிமையாளர்களுக்கான வழங்கல்கள்.
- வங்கியில் கடன்கள் பெறல்
- வங்கிக் கடன்களை மீளச் செலுத்துதல்

..........................................................................................................................................
..........................................................................................................................................
.......................................................................................................................................

- **காசுப்பாய்ச்சலை அறிக்கைப்படுத்துதல்**

வணிகமொன்றின் நிதியாண்டிற்குரிய காசுப்பாய்ச்சல் கூற்று பின்வரும் இரு முறைகளில் தயாரிக்கப்படும்.

**(1)** நேர்முறை
**(2)** நேரில் முறை

Sajith.SP

Sajith.SP